# DEPOSITION OF WITNESS
## CHAPTER ORDER XVIII CODE OF CIVIL PROCEDURE
## IN THE COURT OF DISTRICT MUNSIF, AUNDIPATTI
O.S. No. 35/2024

Deposition of Witness : PW1

| | | | |
|---|---|---|---|
| Name | : செல்வம் | Father's/Husband's Name : | முத்து |
| Village | : மயிலாடும்பாறை | Taluk | : ஆண்டிபட்டி |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : 40 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.07.2026

**2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) எனது நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் எனது வழக்கறிஞருக்கு நான் தான் சொன்னேன். சர்வே எண்.1062/3 நிலம் அரசுக்கு சொந்தமான நிலம் என்றால் சரியல்ல. அந்த சர்வே எண் நிலத்தில் உள்ள மின் மோட்டார் மூலம் தண்ணீர் பொது மக்கள் பயன்பாட்டிற்காக தான் கொண்டு செல்லப்படுகிறது என்றால் சரியல்ல. எனது சொந்த பயன்பாட்டிற்காகத் தான் இருக்கிறது. அதிலுள்ள மோட்டாரை நான் தான் பொது மக்களுக்கு குடிநீருக்காக பயன்படுத்தி வருகிறேன். சர்வே எண்.1062/3 ல் கிராம மக்களுக்காக சமுதாயக் கூடம் மற்றும் விளையாட்டு மைதானம் அமைப்பதற்காக 2ம் பிரதிவாதியிடம் பொது மக்கள் மனு கொடுத்தனர் என்றால் சரியல்ல, நாங்கள் தான் 5 தலைமுறையாக பயன்பாட்டில் இருக்கிறோம். மேற்படி நிலத்தை 5 தலைமுறைகளாக பயன்படுத்துவதை காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் தாக்கல் செய்திருக்கிறேன். நான் சொல்வது போல் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

2) நான் அரசு நிலத்தை ஆக்கிரமிப்பு செய்ததால் மேற்படி நிலத்தில் அரசு அதிகாரிகளால் அறிவிப்பு பலகை வைக்கப்பட்டது என்றால் சரியல்ல. எனது வழக்குரையில் A செட்டியூல் சொத்துக்களின் நான்குமால் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சர்வே எண்.1062/3 நிலமானது அரசு புறம்போக்கு நிலம் என்றாலும், உரிய தரப்பினரான ஆண்டிபட்டி வட்டாட்சியரை சேர்க்காததால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. எனது வழக்குரையில் 80 ஆண்டுகாலமாக தாவா சொத்தை அனுபவம செய்து வருவதாக

சொல்லியுள்ளதை நிரூபிக்கும் வகையில் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதியை என்ன காரணத்திற்காக இந்த வழக்கில் சேர்த்திருக்கிறோம் என்று குறிப்பிட்டு எனது வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதியை பொறுத்து எந்த பரிகாரமும் நான் கேட்கவில்லை என்றால் சரியல்ல, கேட்டிருக்கிறேன். 2ம் பிரதிவாதியை பொறுத்து இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

Taken down by me/before me in open court on 23.07.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

E SUGANTHAN

Digitally signed by E SUGANTHAN
Date: 2026.07.23 13:43:01 +0530

District Munsif,
Aundipatti.